			ரூ.
(d) உட்புறத்தில் நீர்வழங்கு, கழிவுநீர் அகற்றும் ஏற்பாடுகள்.			5,046 24
(e) முழுநேரக காவல பணியாளை நியமித்தல் ..			5,771 72
(f) பிற கட்டிட வேலைகளை நிறைவேற்றல் ..			447 42
(g) தொகுப்பு உள் தலைப்பு			314 77
(h) மேற்பார்வையிடுவதற்கான சிறு செலவுகளும் சில்லறைச் செலவுகளும்.			13,904 29
		ரூ.	
(i) பொருள்கள் குறித்த கூடுதல் செலவுகள்.	(—)	1,943 20	
(j) பணியிடத்தில் உள்ள பொருள்களின் இருப்பு.	(—)	33,990 83	
		2,14,558 91	2,14,558 91

4. ஏற்கனவே கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்குக் கூடுதல் இழப்பீடு வழங்குவதற்கு ரூபாய் 1,23,858-14 ஒப்பளிக்கவும் திட்டமிட்டுள்ளது.

Tagore Centenary Theatre

* 245 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of Thiru N. R. THIAGARAJAN): Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the present stage of the construction of Tagore Memorial Hall at Madras?

தாகூர் நினைவு மண்டபம்

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்): மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னையில் தாகூர் நினைவு மண்டபம் கட்டுவது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சென்னை மாநகரில் தாகூர் நூற்றுண்டு நினைவு மண்டபம் என்னும் அரங்கை கட்டும் பணி 1961-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. அரங்கப் பகுதிக்குக் கடைகால் இறக்கும் பணி **(pile foundation)** செய்து முடிக்கப்பட்டுள்ளது. தேசிய நெருக்கடியை முன்னிட்டுக் கட்டிடம் கட்டும் பணி தள்ளி வைக்கப்பட்டுள்ளது. அரங்கத்தைக் கட்டி முடிக்க முயற்சியெடுப்பது பற்றி அரசாங்கம் மும்முரமாக ஆலோசித்து வருகிறது.

திரு. டி. கே. சண்முகம் : தலைவர் அவர்களே, தாகூர் நினைவு மண்டபம் 5 லட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரையில் செலவழிந்த தொகை 7 லட்சம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ரூ. 7 லட்சத்திற்கு செலவிடப்பட்டும் அங்கோ 9 சிறிய அறைகளைத்தவிர வேறுஒன்றும் இல்லை. பொட்டலாகத்தான் இருக்கிறது. அந்த 9 சிறிய அறைகளைக் கட்டுவதற்கு 7 லட்சம் செலவானது என்றால் இனி அந்த அரங்கம் முழுவதையும் கட்டுவதற்கு ரூ. 5 லட்சம் போதுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

27th March 1969]

மாண்புமிகு திரு. செ. மாதவன் ; அங்கத்தினர் ரூ. 7 லட்சம் என்பதை எங்கேயிருந்து ஊகித்துக் கொண்டார்கள் என்று புரியவில்லை. தற்போது ரூ. 2,14,558·91 தான் செலவாகியிருக்கிறது. நில ஆர்ஜிதம் செய்தல், foundation போடுதல், போன்ற சில்லறை வேலைகளுக்குத்தான் செலவிடப் பட்டிருக்கிறது. கட்டிடத்தை ஆரம்பிக்கும் பணி இன்னும் தொடங்கவில்லை. அதில் சில தகராறுகள் வந்தன. முதலில் குறைந்த பணம் செலவு செய்யலாம் என்று முடிவு செய்து ரூ. 15 லட்சம் கேட்டு பின்னால் ரூ. 25 லட்சம் கேட்டு, எவ்வளவு தொகை அரங்கத்திற்கு ஆகுமென்று கணக்கிடப்பட்டது. மத்திய சர்க்காரிலிருந்து அதிக அளவு பெறமுடியாத காரணத்தாலும் ரூ. 2½ லட்சம் தான் இருக்கிற காரணத்தாலும் குறைந்த செலவில் எப்படிக் கட்டுவது என்பது அரசாங்கப் பரிசீலனையில் இருக்கிறது. இங்கே சொல்லப்பட்ட செலவு foundation போடவும் நில ஆர்ஜிதம் செய்ய வும் செலவிடப்பட்ட தொகைதான்.

திரு. டி. கே. சண்முகம் : தலைவர் அவர்களே, தாகூர் நினைவு அரங் கத்திற்கு என்று 1960 நவம்பரில் அடிக்கல் நாட்டப்பட்டு இன்றுவரை ரூ. 7 லட்சம் செலவிடப்பட்டதாக சர்க்காருடைய நிதிநிலை அறிக்கையிலிருந்து தான் தெரிந்துகொண்டேன். அதனால்தான் கேட்டேன். ரூ. 7 லட்சம் 9 அறைகளுக்கு செலவிடப்பட்டிருக்கிறது என்றால் இன்னும் ரூ. 5 லட்சத்தில் கட்டிடம் முழுவதும் கட்டி முடிப்பதற்கு என்ன திட்டம் இருக்கிறது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது கொடுத்திருக்கும் தகவல் தான் சரி என்று நினைக்கிறேன். அங்கத்தினர் அவர்கள் எந்த அறிக்கையி லிருந்து தகவல் எடுத்துத் தெரிவிக்கிறார்கள் என்று அறிவித்தால் அதைப் பற்றிச் சொல்லமுடியும்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : இந்த தாகூர் நினைவு மண்டபம் அமைக்கும் இடம் எங்கே இருக்கிறது என்று தெரிந்துகொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாவதன் : நுங்கம்பாக்கத்தில் இருக்கிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஆயிரம் விளக்குப் பகுதியில் இருக்கிறது. அந்தப் பகுதியின் பெயர் அப்படியிருக்கிறதே தவிர வேறு ஒன்றுமில்லை. நான் சொல்வதும் சரியானதுதான். மாண்புமிகு அமைச் சர் சொன்னது தவறு என்று கருதத் தேவையில்லை. அதுவும் சரியானது தான்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தாகூர் நினைவு மண்டபத்திற்காகக் கட்டப்பட்டுள்ள அறைகள் என்ன நிலையில் இருக்கின்றன ? பயனற்றதாக அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனவா ? பயன்படுத்தப்பட்டு வருகின் றனவா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கட்டிடத்தில் அறைகள் கட்டப்பட்ட தாகச் சொல்லவில்லை. ஏற்கனவே ஆடை அணிகள் அறை, உட்புறத்தில் நீர் வழங்கு, கழிவுநீர் அகற்றும் ஏற்பாடுகள், மேடை அமைப்பு இவைதான் அமைக்கப்பட்டிருக்கின்றன. formdation போட்டிருக்கிறார்கள். அப்படியே இருக்கிறது. மெயின் பில்டிங் கட்டுவதில் எத்தனை லட்சம் செலவழிப்பது என்ற தகராறில் ஒத்திவைத்திருக்கிறார்கள். எப்படியாவது கட்ட வேண்டு மென்று சொல்லியிருக்கிறோம். சீஃப் இன்சினியர் இறுதியாக மதிப்பீடு தரவேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

MR. CHAIRMAN : Questions 231 to 235 are postponed to 31st March 1969. We will take up question No. 236.